


# தமிழோசை செய்தி மடல்

# 2022-2023

நெய்தல் பறவைகள்

தமிழ்த்துறை

“ உயர்தனிச் செம்மொழியாம்! தன்னிகரில்லா தமிழ்மொழியாம்! ”

## தமிழ்த்துறை சுயவிவரம் :

**அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி 2020** - ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்த்துறையில் இளங்கலைப் பாடப்படிப்பு 2021 ஆம் ஆண்டில் தொடங்கி இரண்டாமாண்டில் பயணித்து வருவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இத்துறையில் 7 உதவிப்பேராசிரியர்கள் பணியாற்றி வந்துள்ளனர். இதில் 3 பேராசிரியர்கள் முனைவர் பட்டம் பெற்றவர்கள். இத்துறை மாணவர்களுக்கு பல்வேறு கருத்தரங்குகள், புதுமையான திறன்கள், பாரம்பரிய விழுமியங்கள், திறமையான கற்பித்தல் முறைகள் மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரங்களை நடத்துவதன் மூலம் இலக்கியம், மொழித்திறன் மற்றும் ஆளுமை மேம்பாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதில் தமிழ்த்துறை கவனம் செலுத்தி வருகிறது.

## தமிழ்த்துறைத் தலைவர்:

**முனைவர்.வே.மங்களேஸ்வரி M.A.,M.Phil.,M.A.,B.Ed.,Ph.D.,NET**



### உதவிப்பேராசிரியர்கள்:

**இரா.பூஜா M.A.,M.Phil., B.Ed.,**
**அ.மரிய சுகிதா M.A., B.Ed.,**

## துறைச்செய்தி :

தமிழ்த்துறையின் சிறப்பம்சங்கள் மற்றும் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உறுதுணையாக அமையும் கல்வியின் குறிக்கோள்கள், இலக்குகள்,தொலைநோக்குப் பார்வைகள் பற்றி இச்செய்தி மடல் விளக்குகிறது .மேலும் தமிழ்த்துறை மாணவர்கள் தமிழ் இலக்கிய மன்றவிழா ஐவகை நிலங்களின் கண்காட்சிகள், கிறிஸ்துமஸ் விழா, சமத்துவப் பொங்கல் விழா குடியரசு தினவிழா, பெண்கல்வி சிந்தனைச் செயல்பாடுகள் பல்வேறு தினங்களை முன்னிட்டு உறுதிமொழிகள் மேற்கொள்ளுதல், போதைப்பொருள் விழிப்புண்வு முகாம் ,முதியோர் இல்லத்தின் உறவுகளை மகிழ்வித்தல் , பெண்கள் தின விழா ,உணவுத்திருவிழா நலப்பணித்திட்டத்தில் ஈடுபடுதல் போன்ற செயல்பாடுகளை தமிழ்த்துறை மாணவர்கள் மேற்கொண்டனர் என்பதை இச்செய்திமடல் விளக்குகிறது.

## VISION

## தமிழ்த்துறையின் குறிக்கோள்கள் :

- தீவு மக்களுக்கு கல்வி அறிவைப் புகட்டி பெண்கல்வியை உயர்த்துதல்.
- எதிர்கால வாழ்க்கைக்கு பெண்கல்வி அவசியம் என்பதை உணர வைத்தல்.
- பெண்கள் சார்ந்து வாழாமல் **'தன் கையே தனக்கு உதவி'** என்ற நம்பிக்கையுடன் செயல்பட வைத்தல்.
- மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்தல்.
- அப்துல்கலாம் பிறந்த மண்ணில் புரட்சிப் பெண்களை உருவாக்குதல்.

## MISSION

## தமிழ்த்துறையின் நோக்கக்கூறுகள் :

- தமிழ்மொழியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்தல்.
- பழங்கால மற்றும் நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களக்க அறிவூட்டுதல்.
- மாணவர்களின் திறன் மற்றும் நெறிமுறைகளை ஊக்கப்படுத்துதல்.
- போட்டித்தேர்வில் தமிழில் அதிக மதிப்பெண் பெற ஆயத்தப்படுத்தி அரசு வேலையில் பணியமர்த்த முயற்சித்தல்.
- கைத்தொழில் கற்றுக்கொடுத்து எதிர்கால வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.
- நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு கல்வி உலவித்தொகை வழங்குதல்.
- **'தமிழம்'** என்ற கணிப்பொறி தட்டச்சு பயிற்சியளித்தல்.கணினி அறிவைப் பெற பயிற்சியளித்தல்.
- மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுபிடித்து பயிற்சியின் மூலம் ஊக்கமளித்து பல்வேறுப் போட்டிகளில் பங்கு பெறச்செய்தல்.
- திறமை வாய்ந்த பல்நோக்குடைய அறிவார்ந்த மாணவர்களை உருவாக்குதல்.

## தமிழ்த்துறையின் தொலைநோக்குப் பார்வை:

- ஆக்கப்பூர்வமான சிந்தனை மற்றும் ஆளுமை வளர்ச்சியுடன் தொடர்பு திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்.
- நவீன சூழலுக்கேற்ப மனிதநேய அணுகுமுறையுடன் நேர்மறையான அணுகுமுறையை உருவாக்குதல்

# தமிழ்த்துறையின் செயல்பாடுகள்

**தமிழ் இலக்கிய மன்றவிழா :**

தமிழ் இலக்கிய மன்றவிழாவில் கல்லூரி முதல்வர் **முனைவர்.அருட்சகோதரி.ஆனி பெர்பட் சோபி** அவர்கள் தலைமையேற்று இவ்விழாவை தொடங்கி வைத்தார்.இவ்விழா **முனைவர் . வே.மங்களேஸ்வரி, தமிழ்த்துறைத் தலைவர்** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.‘‘ **சமகாலத்திய பெண்களின் வாழ்வும் நோக்கும் போக்கும்’’** என்ற தலைப்பில் சேதுபதிஅரசுககலைக்கல்லூரி,இணைப்பேராசிரியை,முனைவர்.மெ.செந்தாமரை அவர்கள் கருத்துக்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வு மாணவிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு பயனுள்ளதாக அமைந்தது.







**ஐவகை நிலங்களின் கண்காட்சிகள் :**

கல்லூரியில் பல்துறைக் கண்காட்சி 14.10.2022 அன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த்துறையில் ஐவகை நிலங்கள் , இலக்கியம் சார்ந்த படைப்புகள் கண்காட்சியாக இயற்கையோடு இயைந்த சூழலை மையமாக வத்துஅமைக்கப்பட்டது.









**கிறிஸ்துமஸ் விழா :**

கல்லூரியில் விழா 22.12.2022 அன்று நடத்தப்பட்டது. இவ்விழாவில் இயேசு கிறிஸ்து பிறப்ப அன்றும் இன்றும் என்ற தலைப்பில் குடில் அமைக்கும் போட்டிகள் நடத்தப்படடன. மாணவிகள் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.



**சமத்துவப் பொங்கல் விழா :**

" யாதும் ஊரே! யாவரும் கேளீர்!" என்பதற்கிணங்க கல்லூரியில் 12.01.2023 அன்று சமத்துவப் பொங்கல்விழாக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு பல்வேறு இலக்கியம் சார்ந்த போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.



**குடியரசு தினவிழா :**

அன்னை ஸ்கொலாஸ்டிக்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் அனைத்து துறை மாணவிகளுக்கும் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் 25.1.2023 அன்று கட்டுரைப்போட்டி. பேச்சுப்போட்டி ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டது. மாணவிகளும் தங்களின் ஆக்கத்திறன்களைச் சிறப்பாக வெளிப்படுத்தினர்.

மேலும் குடியரசு தினவிழாவை முன்னிட்டு கல்லூரியில் 25.01.2023 அன்று இலக்கியம் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் **முனைவர்.அருட்சகோதரி. ஆனி பெர்பட் சோபி** அவர்கள் தலைமையேற்று உரை நிகழ்த்தினார். கல்லூரி துணை முதல்வர் **அருட்சகோதரி**, **ஹெப்சிபா எமல்டா ராணி** கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தார். கல்லூரி முதல்வர் இறுதியில் மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்வித்தார்.







**பெண்கல்வி சிந்தனைச் செயல்பாடுகள் :**

## நாடகம்

தமிழ்த்தறை மாணவிகள் மற்றும் பிற துறை மாணவிகள் சேர்ந்து **‘பெண்கல்வி’ நாடகம்** மூலம் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்கள்.




## பட்டிமன்றம்:

தமிழ்த்தறை மாணவிகள் மற்றும் பிற துறை மாணவிகள் சேர்ந்து **பட்டிமன்றம்** மூலம் மாணவிகள் தங்கள் படைப்பாற்றலின் தன்மையை வெளிப்படுத்தினார்கள்.



## பல்வேறு தினங்களை முன்னிட்டு உறுதிமொழிகள் மேற்கொள்ளுதல் :

### வாக்காளர் தினம் :

கல்லூரி மாணவிகள் 25.12.2023 அன்று வாக்காளர் தினத்தை முன்னிட்டு ஊர்வலம் பேரணி நடத்தப்பட்டது. மேலும் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியில் பங்குப் பெற்று நமது நாட்டின் தேர்தல் முக்கியத்தவம் மற்றும் 100 சதவீதம் வாக்குப்பதிவு நேர்மையான முறையில் பதிவு செய்யவும் உறுதிமொழிகளை மேற்கொண்டனர்.






மேலும் உலக தாய்மொழி தினம், சமூக நீதி நாள் போன்ற தினங்களில் உறுதிமொழிகளை ஏற்றனர்.

### போதைப்பொருள் விழிப்புண்வு முகாம் :

மீனவர்களின் நலன் கருதி14.02.2023 அன்று **ஓலைக்குடா** என்ற கிராமத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டன. போதைப்பொருளின் தீமைகளை துணுக்குகள் மூலம் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.






### முதியோர் இல்லத்தின் உறவுகளை மகிழ்வித்தல் :

தமிழ்த்தறை மாணவிகள் மற்றும் பிற துறை மாணவிகள் சேர்ந்து முதியோர் இல்லம் சென்று அங்குள்ள முதியவர்களை கலை நிகழ்ச்சி மூலம் மகிழ்வித்து, சில மணித்துளிகள் அவர்களுடன் உறவாடி நலம் விசாரித்து ஆறுதல்படுத்தினார்கள்.





**பெண்கள் தின விழா :**

பெண்கள் தின விழாவை முன்னிட்டு 08.03.2023 அன்று தமிழ்த்தறை மாணவிகள் பல்வேறுப் போட்டிகளில் கலந்து கொண்டனர். பட்டிமன்றத்தில் கலந்து கொண்டு பரிசுகளும்,பாராட்டுக்களும் பெற்றனர்.






**நலப்பணித்திட்டத்தில் ஈடுபடுதல் :**


தமிழ்த்தறை மாணவிகள் மற்றும் பேராசிரியைகள் அனைவரும் **குந்துகால், தரவைத்தோப்பு, பாம்பன்** போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்று சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல் மற்றும் மழை நீர் சேகரித்தல் போன்ற கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினோம்.



## பெருங்குளம் :

பெருங்குளம் பகுதிக்குச் சென்று **இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின்** மூலம் அரசாங்கத்தின் ஆணைப்படி மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்ற மண்வகைகளை பக்குவப்படுத்தும் பணியை மேற்கொண்டனர்.



## கல்லூரி வளாகம் சுத்தம் செய்தல் :

கல்லூரி வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளை 31.1.2023 அன்று மாணவிகள் சுத்தம் செய்தனர். கல்லூரி அருகாமையிலுள்ள தோட்டத்திலுள்ள குப்பைகளையும் அகற்றி மாணவிகள் சுத்தப்படுத்தினர்.












**பெண்கல்வியைப் போற்றுவோம் வாரீர்!**